# கலைஞரின் பேனாதான் ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியத்தை,

# மாநில அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெற்றுக் கொடுத்தது!

## சென்னையில் – ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கும் விழாவில்,

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,ஜூலை 26 -**

**சென்னையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட தேர்வில் வெற்றி பெற்ற 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு, பணி நியமன ஆணைகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.**

**அப்போது அவர், ``ஒவ்வொரு மாணவரின் ஒளிமயமான எதிர்காலத்துக்கும் அடித்தளமிடுவது ஆரம்பக்கல்வி. இந்த அடித்தளத்தை மேலும் வலிமையாக்கிட, ஆசிரியர் பணியெனும் அறப்பணியைத் தேர்ந்தெடுத்துள்ள இடைநிலை ஆசிரியர்களை வாழ்த்துகிறேன்” என்று குறிப்பிட்டார்.**

**இதைத் தொடர்ந்து பள்ளிக்கல்வித்துறை சார்பில், ‘திறன்’ & ‘TN Spark’ திட்டத்தையும் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட தேர்வில் வெற்றிபெற்ற 2,457 தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். அவற்றுடன் சேர்த்து, பள்ளிக் கல்வித்துறையின் சார்பாக திறன் மற்றும் டி.என்.ஸ்பார்க் இரண்டு முக்கியமான முன்னெடுப்புகளையும் இங்கு தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### மதிப்பும், மரியாதையும்

பள்ளிக் கல்வித்துறையின் சார்பாக, நடைபெறுகின்ற நிகழ்ச்சி. இந்த மூன்று நாட்களில் மட்டும் இரண்டு நிகழ்ச்சிகள். நேற்று முன்தினம் இதே அரங்கில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பாக, ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் ஒரு மாற்றம் என்னவென்றால், இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி மாணவர்களுக்கான நிகழ்ச்சி, இன்று ஆசிரியர்களுக்காக ஒரு நிகழ்ச்சியை நடத்தி இருக்கிறார், நம் பள்ளிக் கல்வித் துறையின் அமைச்சர் அவர்கள்.

எனக்கு எப்போதும் ஆசிரியர்களைப் பார்த்தால் பதற்றம் வந்துவிடும். ஓரிரண்டு ஆசிரியர்களைப் பார்த்தாலே எனக்கு பதற்றம் வந்துவிடும். இன்றைக்கு 2 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்கள் வந்திருக்கிறீர்கள். எனவே, உங்களைப் பார்க்கும்போது எனக்கு பதற்றம் அதிகமாகவே இருக்கிறது. ஏனென்றால், பள்ளியிலும், கல்லூரியிலும் சரி, `நான் ஒரு அவுட் ஸ்டேன்டிங்’ மாணவன்தான். `நான் அவுட் ஸ்டேன்டிங்’ என்று எதற்காக சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். இருந்தாலும், இன்றைக்கு உங்களையெல்லாம் ஒரே இடத்தில் பார்க்கும்போது மிகவும் பெருமையாக இருக்கிறது.

பொதுவாக, திராவிட இயக்கத்துக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரு நெருங்கிய பந்தம் உண்டு. குறிப்பாக, தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மீது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெரும் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார்கள். இன்றைக்கு, இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், மகிழ்ச்சியான விஷயம், நிறைய மகளிர் ஆசிரியர்களாக இங்கு வருகை தந்து பெருமையாக அமர்ந்து இருக்கிறீர்கள்.

### பெண்களுக்கு முன்னுரிமை

கிட்டத்தட்ட 100 வருடத்துக்கு முன்பு, 1929-ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில், பெண்களை அதிக அளவில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியவர் தந்தை பெரியார் அவர்கள். பெரியாரின் விருப்பத்துக்கு ஏற்ப தொடக்கப் பள்ளிகளில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து பணி வாய்ப்பை வழங்கியவர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு கலைஞர் வழியில், நம் முதலமைச்சர் அவர்கள், ஆசிரியர்கள் மீது அன்போடு இருக்கிறார்கள்.

மாணவர்களுக்கு அகரம் சொல்லிக் கொடுத்து, அவர்கள் படிக்கப் போகின்ற ரோபோடிக்ஸ், ஏ.ஐ., போன்ற பெரிய, பெரிய படிப்புகளுக்கு எல்லாம் அடித்தளம் இடுவது தொடக்கப்பள்ளி ஆசிரியர்களாகிய நீங்கள்தான். உங்களிடமிருந்துதான் கல்வியை மட்டுமின்றி, உலகையும் கற்றுக்கொள்ள இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆரம்பக் கல்வியை வழங்கும் பணியைத் தொடங்க உள்ள நீங்கள் ஒவ்வொருவரும் போற்றுதலுக்கும், பாராட்டுகளுக்கும் உரியவர்கள்.

### வரலாற்றுச் சாதனை

திராவிட மாடல் அரசு அமைந்த நாள் முதல் நம் முதலமைச்சர் அவர்கள் தீட்டுகின்ற ஒவ்வொரு திட்டமும் வரலாற்றுச் சாதனையாக உயர்ந்து நிற்கிறது. அந்த வகையில், இன்றைய தினம் இங்கு நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியும் வரலாற்றில் நிச்சயம் இடம் பெறப்போகிறது என்பதில் எந்தவித சந்தேகமும் எனக்கில்லை.

நீங்கள் இன்றைக்கு பணி ஆணையைப் பெறுவதினால் மட்டும் அதைச் சொல்லவில்லை. பள்ளிக் கல்வித்துறை வரலாற்றிலேயே முதன்முறையாக மலைப் பகுதிகளில், காலிப் பணியிடமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு 100-க்கு 100 சதவிகிதம் இடைநிலை ஆசிரியர்களை பணியமர்த்தி, வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கிறது நம் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

இதன் மூலம் திராவிட மாடல் அரசு என்றால் சமூகநீதிக்கான அரசு என்று மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

### இடைநிற்றல் இல்லாத ஒரே மாநிலம்

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறையின் பொற்காலம் எதுவென்று கேட்டீர்கள் என்றால் அது நம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியின் பணிக்காலம்தான் என்று நம் முதலமைச்சர் அவர்களே பலமுறை பாராட்டி இருக்கிறார்கள். அதை இன்றைக்கு மீண்டும் பொன் எழுத்துகளால் பொறித்து நிரூபித்து காட்டி இருக்கிறார் நம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள். தொடக்கக் கல்வியில் 100 சதவிகிதம் இடைநிற்றல் இல்லாத ஒரே மாநிலம் இந்தியாவில் தமிழ்நாடு மட்டும்தான். அதற்குக்காரணம் இங்கு வந்திருக்கின்ற ஆசிரியர்கள் நீங்கள்தான். இதை நானாகச் சொல்லவில்லை, ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள் சொல்கின்றன.

அத்தகைய சிறப்புமிக்க கல்வித்துறையில் பணி ஏற்கக்கூடிய உங்களுக்கு எல்லாம் நான் சொல்வது ஒன்றே, ஒன்றுதான். ஊர்கூடி இழுக்க வேண்டிய கல்வி எனும் தேருக்கு, தொடக்கக் கல்வி ஆசிரியர்களாகிய நீங்கள்தான் அச்சாணி. இதை உணர்ந்த காரணத்தால்தான் நம் கலைஞர் அவர்கள் உங்களின் முன்னேற்றத்திற்காக ஏராளமான திட்டங்களைத் தந்தார்கள். கலைஞர் அவர்களின் பேனாதான் ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியத்தை, மாநில அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெற்று கொடுத்தது.

ஒரே கையெழுத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை, அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பியவர் யார் என்று நான் சொல்லத் தேவையில்லை, உங்களுக்கே தெரியும். ஆனால், ஒரே கையெழுத்தின் மூலம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை பணி நிரந்தரம் செய்த ஒரே தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். கலைஞர் வழியில் செயல்பட்டு வருகின்ற நம் முதலமைச்சர் அவர்களும், அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் என்னென்ன வேண்டும் என்பதை உரிய நேரத்தில், உங்களின் தேவையை அறிந்து அந்தத் திட்டங்களைத் தந்துகொண்டு இருக்கிறார்கள்.

அரசுப் பள்ளிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் இன்றைக்கு இவ்வளவு திட்டங்களை வழங்குகிறோம் என்றால், இவற்றையெல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் செலவாகப் பார்க்கவில்லை. அவற்றையெல்லாம் நம் தமிழ்நாட்டு எதிர்காலத்தின் மீதான முதலீடாகத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார்கள். அதனால்தான் ஒன்றிய அரசு கல்விக்கான நிதியை வழங்காமல் நிதிச்சுமையை ஏற்படுத்துகின்ற போதிலும், நம் முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்களும், மாணவர்களும் பாதிக்காத வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் நீங்கள் உணர்ந்து உங்களின் பணிகளைச் சிறப்பாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### துணை நிற்கும்

குறிப்பாக, விளையாட்டுத்துறை அமைச்சராக உங்களுக்கு ஒரு வேண்டுகோள். பிள்ளைகளை படிக்கச் சொல்லும் அதே வேளையில், விளையாடவும் நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கு நம் திராவிட மாடல் அரசு என்றைக்கும் துணை நிற்கும் என்று வாழ்த்தி, இந்த வாய்ப்பை அளித்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், உங்களின் துறை அதிகாரிகளுக்கும், வந்திருக்கின்ற ஆசிரியர் பெருமக்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் எனது நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், வெற்றியழகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் சந்திரமோகன் ஐ.ஏ.எஸ்., ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் ஜெயந்தி ஐ.ஏ.எஸ்., ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்கத்தின் மாநில திட்ட இயக்குநர் மருத்துவர் ஆர்த்தி ஐ.ஏ.எஸ்., பள்ளிக்கல்வித் துறையின் இயக்குநர் கண்ணப்பன், பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் முத்துக்குமார், இயக்குநர்கள் பழனிச்சாமி, நரேஷ், தமிழன் பிரசன்னா, ராஜீவ் காந்தி, இமையம், ஆசிரியர் முன்னேற்றச் சங்கத்தின் மாநிலத் தலைவர் தியாகராஜன் உள்பட அரசு அதிகாரிகள் கல்வித்துறை அதிகாரிகள் அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




**துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.07.2025 அன்று கலந்துகொண்ட அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.**






● சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு, பணி நியமன ஆணைகளை வழங்கி பள்ளிக்கல்வித்துறை சார்பில் ‘திறன்’ & ‘TN SPARK’ திட்டங்களையும் தொடங்கி வைத்தார்.







● சென்னை கிழக்கு மாவட்டக் கழகம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி வால்டாக்ஸ் சாலையில் செயல்பட்டு வரும் தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தின் சார்பில், கட்டணமில்லா கணினிப் பயிற்சி மையத்தைத் திறந்து வைத்தார்.







● சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட துறைமுகம், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளின் BLA-2, BOOTH LEVEL DIGITAL AGENTS மற்றும் பாக அளவிலான இளைஞர் அணியினருக்கான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.